

**வாரந்தோறும் ஒரு தீபம்!**

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**(வியாழன்தோறும்)**

| 08.02.2018 | **06. பரத்தின் அதிகாரமே, “ராஜ பாதை” நடத்தும்!** |
|---|---|



“நீ எங்கேயிருந்து வந்தவன்?” என்றும் “உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரம் உண்டு.....” என்றும் கூறியதைக் கேட்ட இயேசு “பரத்திலிருந்து உமக்கு கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமும் இராது!” என கெம்பீரமாய் உரைத்தார்! (யோவான்.19:9-11).

இந்த உலகத்தைத் தங்கள் ராஜ்யமாய் கொண்டவர்கள், இவ்வுலக அதிகாரங்களுக்கே நேரடியாக கீழ்ப்பட்டிருக்கிறார்கள்! அதைத்தான் கவர்னர் பிலாத்தும் சரியாய் கூறினார்! ஆனால் இயேசுவோ “என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல” என அறிவித்து, தன் மீது **உடனடியான அதிகாரம் பரத்திலிருந்துதான் முதலாவது வரவேண்டும்...... அதன் பின்புதான், கவர்னராகிய** உம்மிடம் அது வரமுடியும்! என ஆணித்தரமாய் உரைத்து “தான் எங்கேயிருந்து வந்தவர்” என்பதை இவ்வுலக ராஜ்ய கவர்னர் விளங்கும்படி சாட்சி உரைத்தார்.

“நான் எங்கேயிருந்து வந்தேன் என்றும், எங்கே போகிறேனென்றும் அறிந்திருக்கிறேன்” (யோவான்.8:14) என்ற இயேசுவின் சாட்சியை ஆணித்தரமாய் கூறுபவர்களே, இயேசு காட்டிய பாதையில் அவரைப் பின்பற்றிட முடியும்!

**- ரத்னம்**